

# அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில் – மடப்புரம் – திருப்புவனம் வட்டம் சிவகங்கை மாவட்டம்.

## குறுகிய கால மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (மூன்றாம் அழைப்பு)

ந.க.எண்:3/2021/அ2 நாள்: 28.03.2022.

மறுபொதுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் : 07.04.2022.
இடம் : திருக்கோயில் ஓம்சக்தி மண்டபம்.
நேரம் : பிற்பகல் 3.00 மணி.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிமங்கள் பசலி1431க்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வருகின்ற 07.04.2022 பிற்பகல் 3.00 மணியளவில் திருக்கோயில் ஓம்சக்தி மண்டபத்தில் வைத்து மானாமதுரை ஆய்வர் முன்னிலையில் உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியால் மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி திறப்பு நடத்தப்படும்.

**உரிமம் விபரம்**

| வ. எண் | உரிமம் இனம் | காலம் | ஏல டெபாசிட் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | நெல் சேகரிக்கும் உரிமைக் குத்தகை | 05.07.2021 (சேகரிக்கப்பட்டது) முதல் 30.06.2022 முடிய | 10000.00 | 10000.00 | 100.00 |

**நிபந்தனைகள்**

1. மறுபொதுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கேட்க விருப்பம் உள்ளவர்கள் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கேட்க விரும்பும் இனத்திற்குரிய ஏல டெபாசிட் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகைக்கு உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம் என்ற பெயருக்கு திருப்புவனம் வங்கியில் மாற்றும் வகையில் வங்கி வரைவோலை எடுத்து பொது ஏலத்திலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளலாம்.

2. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் ஒப்பந்த விலைப்புள்ளி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை மற்றும் படிவம் 01.04.2022 முதல் 06.04.2022 முடிய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் உரிய இனத்தினை ஒப்பந்தப்புள்ளி கவரில் எழுதி, ஒப்பந்தப்புள்ளியில் உரிய ஒப்பந்தப்புள்ளி தெகைக்குரிய வரைவோலையுடன் இணைத்து ஒப்பந்தப்புள்ளியினை உரிய நேரத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி பெட்டிக்குள் போட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும்

தொகையினை எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல், திருத்தல் இல்லாமல் எழு தேதியுடன் கையொப்பம் இட வேண்டும். மூடிய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 07.04.2022தேதி பிற்பகல் 2.00 மணிக்குள் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் போட வேண்டும்.

3. முதலில் பொது ஏலம் நடத்தப்படும் பொது ஏலத்தில் அதிகபட்ச தொகைக்குகேள்வி கேட்டவுடன் அதற்கு மேல் கேள்வி இல்லாத நிலையில் கேள்வி ஏலம் நிறுத்தப்பட்டு, வருகைபுரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் ஏலத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை இதில் எது அதிகபட்ச தொகையோ (உயர்ந்த கேள்வி கேட்டவருக்கு) இலாகா அதிகாரத்திற்குட்பட்டு ஏலம்/ஒப்பந்தப்பள்ளி முடிவு செய்யப்படும்.

4. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி வெற்றி பெறாதவர்களின் முன்வைப்புத் தொகைக்கு ஏலம் முடிந்த பின்பு அதாவது தங்களது வரைவோலை திருக்கோயில் கணக்கில் வரவுவந்த ஒருவாரத்திற்குப் பின்னர் வட்டி ஏதுமின்றி திருக்கோயிலின் காசோலையாகத் திருப்பித்தரப்படும்.

5. பொதுவாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உயர்ந்த கேள்விதாரருக்கு விடப்படும். உயர்ந்த கேள்வி திருக்கோயில் மதிப்பிற்கு குறைவாக இருந்தால் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி எவருக்கும் உறுதி செய்ய இயலாது.

6. ஏலம்ஃஒப்பந்தப்புள்ளி முடிவு இந்து சமய அறநிலையத்துறை ஆணையாறன் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

7. எந்த ஒரு இனத்தையும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்கள் அந்த இனத்திற்குரிய ஏலத்தொகை முழுவதையும், பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் அப்பொழுதே, அவ்விடத்திலேயே உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியிடம் வரைவோலையாகவோ, ரொக்கமாகவோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவேண்டும், தவறினால் அடுத்த கேள்விதாரருக்கு ஏலம் உறுதி செய்யப்படும். அதனால் ஏற்படும் சகலவிதமான நஷ்டங்களையும் முதல் கேள்விதாரரிடம் வசூலிப்பதுடன், டேவணித்தொகை முழுவதும் திருக்கோயிலுக்கு ஆதாயமாக வைத்துக் கொள்ளப்படும்.

8. உரிமைக் குத்தகையினை எடுப்பதற்கு 25வயதிற்கு மேற்பட்ட இந்துக்கள் மட்டுமே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

9. திருக்கோயிலுக்கு எந்த வகையிலாவது பாக்கி செலுத்த வேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்துபவர்கள் மற்றும் அவரின் உறவினர்கள், பினாமியாக திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள் பொது பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்க அனுமதிக்கமாட்டார்கள்.

10. காரணம் கூறாமல் எந்த ஒரு கேள்வியையும், நிராகரிக்கவோ அல்லது பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.

11. திருக்கோயில் நன்மையை கருத்தில் கொண்டு உரிமைதாரர்களுக்கு அவ்வப்போது உத்தரவு பிறப்பிக்கவும், புகார் எதுவும் பெறப்பட்டால் அதனை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் இத்திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.

12. உரிமைத் தொகையில் எக்காரணத்தைக் கொண்டும் தள்ளுபடி எதுவும் அளிக்கப்படமாட்டாது. உரிமைதாரருக்கு இராஜீகத்தாலோ, தெய்வீகத்தாலோ, ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் கோயிலுக்கு எவ்வித பொறுப்பும் இல்லை எந்த ஒரு இனத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உள்குத்தகைக்கு விடக்கூடாது.

13. உரிமைக்காலம் முடிந்த பின்பு சம்பந்தப்பட்ட உரிமத்தில் உரிமைதாரருக்கு பின் தொடர்ச்சியோ அல்லது உரிமையோ கிடையாது.

14. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் இறுதி முடிவு தெரிந்த அல்லது உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியின் அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் தன் சொந்தப்பொறுப்பில் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டியது. அவ்வாறு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகுதான் சம்பந்தப்பட்ட உரிமத்தினை அனுபவிக்க உரிமையுண்டு.

15. வேறு நிபந்தனைகள் இருப்பின் அது சேர்க்கப்பட்டு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியின் போது தெரிவிக்கப்படும். மேலும் ஏல நிபந்தனைகளில் அய்யப்பாடு ஏற்படும் பட்சத்தில் அது குறித்து கோயில் நிர்வாகிகளால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

16. பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து உரிமம் பெற்றவர்கள் விற்பனைவரி, நகராட்சிவரி, வருமான வரித்துறையினரால் கூறப்படும் வரி தம் சொந்தப் பொறுப்பில் திருக்கோயிலுக்கு செலுத்தப்படவேண்டும்.

<u>I. நெல் சேகரித்துக் கொள்ளும் உரிமம்.</u>

1. நெல் சேகரிப்பினை தன் சொந்தப் பொறுப்பில் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

2. சேகரிக்கப்பட்ட நெல் மற்றும் நவதானியங்களை உடனுக்குடன் தன் சொந்தப் பொறுப்பில் சாக்குகள் மூலம் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

3. நெல் மற்றும் நவதானியங்களை சேகரிக்கும் இடங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஜி.செல்வி பி.ஏ.,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

**1.** திரு.ஆ.பழனியப்பன்,
அறங்காவலர்குழுத் தலைவர்
**2.** திரு.ச.பாஸ்கரன், அறங்காவலர்,
**3.** திருமதி.சி.கமலா, அறங்காவலர்,
**4.** திருமதி.ப.தீபாஅமிர்தம், அறங்காவலர்,
**5.** திரு.ந.சண்முகவேல், அறங்காவலர்,